DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 21/2024
Prosecution Witness – D.W. 2

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. பேச்சி என்ற இசக்கிமுத்து |
| Father's Name | : | நாகராஜன் |
| Village | : | நாகர்கோவில் |
| Taluk | : | அகஸ்தீஸ்வரம் |
| Calling | : | கூலி |
| Age | : | 26 |
| Date | : | 23.03.2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.03.2026.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

23.03.2026

**முதல் விசாரணை:-**

நான் 158/80H, தெப்பகுளம் வடக்கு தெரு, கிருஷ்ணன்கோவில், வடசேரி, நாகர்கோவில் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். 29.08.2023 அன்று காலை 4.00 மணிபோல் வீட்டில் தூங்கி கொண்டிருந்தபோது, என் வீட்டு கதவை தட்டி ஒரு 4 போலீசார் 28.08.2023 அன்று இரவு 8.15 மணிக்கு ஒரு கொலை நடந்திருப்பதாகவும், அது குறித்து விசாரிக்க வேண்டும் சொல்லி என்னை கூப்பிட்டு போனார்கள்.

வடசேரி காவல் நிலையத்திற்கு கூட்டி சென்று, என்னுடைய நண்பர் மனோஜ் கொலைசெய்யப்பட்டு இறந்திருக்கிறார் என சொன்னார்கள். எனக்கு அது பற்றி எதுவும் தெரியாது என சொன்னேன். அவர்கள் சொல்ல போய்தான் அதை பற்றி எனக்கு தெரியும் என சொன்னேன்.

என்னை காவல் நிலையத்திற்கு அழைத்து செல்லும்போது காவல் நிலையத்தில் வைத்து என்னுடைய நண்பர்கள் அரவிந்த், சண்முககிருஷ்ணா என்கிற கிஷோர் ஆகியோரை இன்ஸ்பெக்டர் திருமுருகன், SI சரவணகுமார், SSI சிவாஜி ஆகியோர் விசாரித்து கொண்டிருந்தார்கள். நானும் அருகேதான் இருந்தேன்.

இன்ஸ்பெக்டர் திருமுருகன் போனுக்கு வெட்டூர்ணிமடம் சத்தியம் மருத்துவமனையிலிருந்து ஒரு வீடியோ அனுப்பியிருந்தார்கள். அந்த வீடியோவில் இறந்துபோன மனோஜ்ஜை இரண்டு பேர் பைக்கில் கொண்டு வந்து தள்ளிவிட்டு விட்டு அவருடைய வயிற்றிலிருந்து ஆயுதம் ஒன்றை எடுத்து கொண்டு தப்பியோடிய காட்சி ஒன்று இருந்தது. அந்த வீடியோவை காண்பித்து எங்கள் மூவரிடமும் தனித்தனியாக விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த CCTV பதிவில் அவ்வாறு தெரிந்த 2 பேர் யார் என கேட்டுக் கொண்டிருந்தார்கள். எங்கள் மூவருக்குமே அந்த இரண்டு பேர் யார் என்று தெரியவில்லை. அன்று காலை 10.00 மணியளவில் அரவிந்தும், கிஷோரும், வக்கீல்களை வரவைத்து விசாரணையிலிருந்து வெளியே சென்றுவிட்டார்கள். இன்ஸ்பெக்டர் திருமுருகனிடம் என்னையும் விட்டு விடுங்கள் என கேட்டதற்கு மாலை 5.00 மணியளவில் எனது பெற்றோர் வந்து கூட்டி செல்லட்டும் என

சொன்னார். இறந்துபோன மனோஜ் வீட்டில் உள்ளவர்கள் காவல் நிலையத்திற்கு வெளியே இருந்து அழுத்தம் கொடுத்து கொண்டிருந்தார்கள். நான் மட்டும் காவல் நிலையத்தில் இருந்தேன்.

இறந்துபோன மனோஜின் அண்ணன் ராஜகோபால் இன்ஸ்பெக்டர் திருமுருகனிடம் பேசிக் கொண்டிருந்தார். CCTV பதிவிலிருந்த இரண்டு நபர்களை யார் என்று அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், அதனால் என்னை இந்த வழக்கில் குற்றவாளியாக சேர்க்கலாம் என்றும், பேசிக் கொண்டிருந்தார்கள். வடசேரி காவல் நிலைய குற்ற எண். 120/2023 என்ற வழக்கில் முன் தேதியிட்டு கொலை நடந்த தேதியன்றே பதிவு செய்ததாக என் மீது வழக்கு பதிவு செய்தார்கள். அதற்கு ஆதரமாக இறந்துபோன மனோஜின் அண்ணன் ராஜகோபாலும், அவனுடைய தம்பி அஜய் என்பவரும் வெட்டூர்ணிமடம் சத்தியம் மருத்துவமனையில் கொலை நடந்த அன்று மனோஜ்ஜை கொண்டு வந்து சிகிச்சைக்கு சேர்த்ததாக மனு எழுதி கொடுத்தார்கள். நான் ஏன் எப்படி செய்கிறீர்கள் என்று இன்ஸ்பெக்டர் திருமுருகனிடமும் SI யிடமும் அழுதேன்.

நான் சத்தம்போட்டு நான் இந்த குற்றத்தை செய்யவில்லை என கத்தியதால் என் கண்களை கட்டிவிட்டு காவல் நிலையத்தில் மாடியிலிருந்த ஒரு ரூமில் வைத்து என்னை அடித்தார்கள். அதில் எனக்கு உடலில் காயம் ஏற்பட்டது. துருபிடித்த கம்பி மற்றும் பிளாஸ்டிக் பைப் போன்ற ஆயுதங்களால் என்னுடைய கை, கால்களில் அடித்தார்கள்.

என்னை காவல் நிலையத்திலிருந்து ஆயுதம் கைப்பற்ற வேண்டும் என சொல்லி ஒழுகினசேரி அருகே உள்ள சுடுகாடு ஒன்றிற்கு போலிரோ காரில் கூட்டிச் சென்றார்கள். அந்த காரில் போகும்போதே ஒரு ஸ்கூரு டிரைவர் போன்ற ஆயுதத்தை ஒரு கவரில் வைத்து போலீசாரே கட்டினார்கள். சுடுகாடு அருகே உள்ள வயலில் அதை தூக்கி போட்டுவிட்டு, அதை எடுத்து வா என என்னிடம் சொன்னார்கள். நான் எடுக்க மாட்டேன் என சொன்னேன். என்னை காருக்குள் வைத்து அடித்தார்கள். என்னை கைவிலங்கு போட்டு அந்த பொருளை போய் எடுத்து வா என கட்டாயப்படுத்தி வீடியோவும் எடுத்தார்கள். வடசேரி காவல் நிலையத்திற்கு மீண்டும் கூட்டி வந்து என்னை அடித்த அதே அறையில் போட்டு என்னை அடித்தார்கள். ஜெயிலுக்கு கூட்டி போவோம் என்றும், அதற்கு முன்னர் ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கும், நீதிபதியிடமும் கூட்டி செல்வோம் என்றும், அங்கு நான்தான் கொலை செய்தேன் என சொல்ல வேண்டும் என சொன்னார்கள். கை, கால்களில் எப்படி காயம் ஏற்பட்டது என கேட்டால் இறந்துபோன மனோஜ் தாக்கியதில் ஏற்பட்டது என சொல்ல வேண்டும் என சொன்னார்கள்.

அப்படி நான் சொல்ல வில்லை என்றால் என் வீட்டில் உள்ள அப்பா, அம்மா, தங்கை ஆகியோர் மீது பொய் கேஸ் தாக்கல் செய்து உள்ளே தள்ளிவிடுவோம் என மிரட்டினார்கள். ஆசாரிபள்ளம் மருத்துவமனையில் என்னை பார்த்த மருத்துவர் இப்போது அடித்து ஏற்பட்டது தானே என கூறினார். அதன்பிறகு ஜெயிலுக்கு கூட்டி சென்றபோது கூட கன்னத்தில் அடித்துதான் கூட்டிச் சென்றார்கள். அப்போது கூட சொன்னேன் CCTV பதிவில் உள்ளவர்களை பிடிக்காமல் தேவையில்லாமல்

என்னை ஏன் பிடிக்கிறீர்கள் என கேட்டேன். அதன்பிறகு என்னை குண்டர் சட்டத்தில் கைது செய்து பாளையங்கோட்டைஜெயிலில் அடைத்துவிட்டார்கள். அதன் வக்கீலை வைத்து என்னால் வேறு நடவடிக்கை எதுவும் எடுக்க முடியவில்லை. ஜெயிலிலிருந்து வெளியே வந்தபிறகு இன்ஸ்பெக்டர் திருமுருகனிடம் அந்த CCTV பதிவை கேட்டேன். அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டதாக அவர் கூறினார். அந்த வீடியோவை திரும்பவும் கேட்டதால் வழிப்பறி கேஸ் ஒன்றில் என்னை மீண்டும் கைது செய்தார்கள். மனோஜ் எனது நண்பர்தான் நான் எந்த குற்றமும் செய்யவில்லை. அவன் இறந்த தேதியில் அவனை நான் பார்க்கவே இல்லை.

மதிய உணவு இடைவேளைக்கு பிறகு குறுக்கு விசாரணை.

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்) :-**

முதலில் எனக்காக இலவச உதவி சட்ட மையத்திலிருந்து என்னுடைய மனுவின் பேரில் எனக்காக ஒரு வழக்கறிஞர் ஆஜராகியிருந்து, அதன் பிறகு தற்போது நான் தனிப்பட்ட முறையில் வழக்கறிஞர் வைத்து வழக்கு நடத்தி வருகிறேன் என்றால்சரிதான். நான் கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் இரண்டு வழக்கறிஞர்களும் இந்த வழக்கை நடத்தினார்கள் என்றால் சரிதான்.

29.08.2023 அன்று அதிகாலை 4.00 மணிக்கு என்னை போலீசார் என்னுடைய வீட்டிலிருந்து கூட்டிச் சென்றார்கள் என நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 29.08.2023 அன்று காலை 8.00 மணிக்கு தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் ஊரில் உள்ள பஸ் ஸ்டாப்பில் வைத்து இந்த

வழக்கின் புலன் விசாரணை அதிகாரி என்னை கைது செய்தார் என்றால் சரியல்ல. என்னிடமும், இந்த வழக்கின் அ.சா. 2 மற்றும் 3 யிடமும் நான் சொல்வது போல எந்த ஒரு CCTV பதிவையும் காட்டி விசாரிக்கவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

28.08.2023 ஆம் தேதி இரவு 10.00 மணிக்கு அ.சா. 1 என் மீது கொடுத்த புகாரின் பேரில் மனோஜ்ஜை நான் கொலை செய்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. முன் தேதியிட்டு இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டதாக நான் இந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 29.08.2023 அன்று காலை 8.00 மணிக்கு என்னை கைது செய்து அன்று காலை 10.00 மணியளவில்தான் என்னை வடசேரி காவல் நிலையம் கொண்டு வந்தார்கள் என்றாலும் அதனால் அதற்கு முன்பு அந்த காவல் நிலையத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல எந்த ஒரு காவலரும் கைது செய்து கொண்டு வந்தபிறகு அடிக்கவில்லை என்றால் சரியல்ல.

போலீஸ் அடித்ததாக நான் சொல்வது இந்த வழக்கில் 16 அரசு தரப்பு சாட்சிகள் விசாரித்தபிறகு இந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக நான் சொல்லும் திட்டமிட்ட பொய் என்றால் சரியல்ல.

வழக்கு பொருட்களான ஸ்கூரு டிரைவர் மற்றும் கத்தி ஆகியவற்றை நான் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கொடுத்த தகவலின் அடிப்படையில் புலன் விசாரணை அதிகாரியை அந்த பொருட்களை ஒளித்து வைத்திருந்த இடத்திற்கு அழைத்து சென்று எடுத்துக் கொடுக்க புலன் விசாரணை அதிகாரி கைப்பற்றினார்

என்றால் சரியல்ல. என்னை அந்த பொருட்களை கட்டாயப்படுத்தி அந்த இடத்திலிருந்து போலீசார் எடுத்துக் கொடுக்க சொன்னதாக நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

29.08.2023 அன்று காலை வடசேரி காவல் நிலையத்திற்கு வந்தபிறகு, செல்வகுமார் மற்றும் உதயகுமார் ஆகிய சாட்சிகள் முன்னிலையில் நான் தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில்தான் அந்த பொருட்கள் கைப்பற்றப்பட்ட என்றால் சரியல்ல.

நான் என் கையில் வைத்திருந்த கத்தியை இறந்துபோன மனோஜ்ஜை பார்த்து வீசியபோது, அந்த கத்தி தவறி கீழே விழுந்தவுடன் மீண்டும் ஸ்கூரு டிரைவரை வைத்து மனோஜ்ஜை தாக்க முயற்சி செய்தபோது தன்னுடைய உயிரை காப்பாற்றி கொள்ள மனோஜ் கீழே இருந்த கத்தியை எடுத்து என்னுடைய உடம்பில் இடது கால் மற்றும் இடது கையில் காயத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. சம்பவத்தில் எனக்கு ஏற்பட்ட அந்த காயங்களுக்கு பொய்யான விளக்கங்கள் கொடுப்பதற்காக பிற்பாடு யோசித்து போலீசார் அடித்ததால் காயம் ஏற்பட்டது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நீதிபதி முன்பு என்னை ஆஜர்படுத்தும்போது நான்தான் மனோஜ்ஜை கொன்றதாக போலீசார் சொல்ல சொல்லி மிரட்டினார்கள் என நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆசாரிபள்ளம் மருத்துவமனையில் என்னை ஆஜர்ப்படுத்தியபோது இரண்டு நபர்கள் கத்தியால் காயம் ஏற்படுத்தியதாக இறந்துபோன மனோஜ்ஜூம், அ.சா. 1ராஜகோபாலையும், மனதில் வைத்து

கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. ஜாமீனில் நான் வெளியே வந்தபிறகு இன்ஸ்பெக்டர் திருமுருகனிடம் CCTV பதிவை நான் கேட்டதாகவும், அதற்கு அவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டதாக சொன்னதாகவும் நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும் அவ்வாறு எந்த ஒரு CCTV பதிவும் கிடையாது என்றாலும் சரியல்ல. நீதிபதி கேட்கும்போது எனக்கு ஏற்பட்ட காயங்கள் மனோஜ் தாக்கியதால் ஏற்பட்ட காயங்கள் என சொல்ல வேண்டும் என்றும் இல்லை என்றால் என் பெற்றோர் மீதும், என் தங்கை மீதும் பொய் கேஸ் பதிவு செய்து உள்ளே தள்ளி விடுவதாக போலீசார் மிரட்டியதாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஜாமீனில் வந்தபிறகு CCTV பதிவை கேட்டு வந்ததால் என்மீது வழிப்பறி வழக்கு ஒன்று பொய்யாக தாக்கல் செய்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் ஜாமீனில் வந்தபிறகு குற்றம் எதுவும் செய்திருந்தால் போலீசார் என்னை கைது செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல.

2022 ஆம் ஆண்டு தீபாவளி சமயத்தில் நான் குடித்துவிட்டு மற்றவர்களிடம் பிரச்சினை செய்ததால் இந்த வழக்கில் இறந்துபோன மனோஜ் என்னை குடித்துவிட்டு பிரச்சினை செய்யாத என அறிவுரை கூறினார் என்றால் சரியல்ல. அதனால்தான் எனக்கு அறிவுரை சொல்ல நீ யார் என கேட்டு மனோஜ்ஜை அடித்தேன் என்றால் சரியல்ல. அதன்பிறகு மனோஜ்ஜை எங்கு பார்த்தாலும் அவனை முறைத்து பார்ப்பதும், கொலை மிரட்டல் விடுவதுமாக இருந்தேன் என்றால் சரியல்ல.

அதனால் தான் 25.08.2023 அன்று மாலை 5.30 மணிக்கு மனோஜ் நான் வேலை பார்த்த கடை பக்கம் டீக்குடிக்க வந்தபோதும் இந்த பக்கம் வரகூடாது என சொல்லியுள்ளேன்ல்ல ஏன் இந்த பக்கம் வருகிறாய் என சொல்லி நான் மனோஜ்ஜை மிரட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த மிரட்டலையும் மீறி 28.08.2023 அன்று இரவு 8.15 மணியளவில் கிருஷ்ணன்கோவில் வடக்கு ரதவீதி, தெப்பகுளத்தின் தென்மேற்கு மூலையில் வைத்து இந்த வழக்கின் அ.சா. 1, 2 மற்றும் 3 ஆகியோர் முன்னிலையில் வைத்து, நான் மனோஜ்ஜை பார்த்து எவ்வளவு சொன்னாலும் கேட்கமாட்டியா, ஏன் இங்கு வந்தாய் என்று கெட்ட வார்த்தை பேசி, கையில் இருந்த கத்தியை வைத்து, மனோஜின் தலையை நோக்கி வெட்டிய போது மனோஜ் விலகிக் கொண்டார் என்றால் சரியல்ல. என் கையில் இருந்த கத்தி அருகில் இருந்த சுவற்றில் பட்டு கீழே விழுந்தது என்றால் சரியல்ல. அதன்பிறகு நான் இடுப்பு பகுதியில் மறைத்து வைத்திருந்த ஸ்கூரு டிரைவரை வைத்து மனோஜின் மார்பிலும், வயிற்றின் மேல் கீழ் பகுதியிலும், முதுகிலும், வலது புற காதிலும் குத்தி காயங்கள் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. அதனால்தான் மனோஜ் தான் தப்பிப்பதற்காக கீழே விழுந்த கத்தியை எடுத்து என்னுடைய இடது கால் மற்றும் இடது கையிலும் லேசான வெட்டுக் காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. நான் மனோஜ் மீது ஆத்திரம் தீராமல் மீண்டும் ஸ்கூரு டிரைவரை எடுத்து மனோஜின் வலது புற கழுத்து, நடுக்கழுத்து, வலதுபுற நெஞ்சு பகுதிகளில் மனோஜ்ஜை கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் மாறி மாறி குத்தி கொலை செய்தேன் என்றால் சரியல்ல.

அதனால் மனோஜின் இறப்பிற்கு நான்தான் காரணம் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல.